## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 14/2013</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 12.04.2023**

**பெயர் - டில்லிபாபு**

**த/பெ - பழனி**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.14 p.m.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>-**

10. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாசா ஆ 1 ட்ரெஸ்ட் டீட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணம் எந்த பகுதியில் உள்ள கோவிலுக்கான ட்ரெஸ்ட் டீட் என படித்து தெரிந்துகொள்ளவில்லையா என்றால் இல்லை. வாசா ஆ 1ல் மேற்படி ட்ரெஸ்ட் அலுவலகம் எண் 350/3 பெரியபாளையம் சாலை, 107, பண்டிக்காவனூர் சென்னை - 600 067 என்ற முகவரியில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசா ஆ 1ல் அந்த ட்ரெஸ்ட்டின் பெயராக ஸ்ரீ எச்சியம்மன் பரமேஸ்வரி ஆலையம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிசா ஆ 3 ட்ரெஸ்ட் ஆவணம் வாசா ஆ 1க்கு பின்னிட்ட தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி தரப்பில் ட்ரெஸ்ட் பதிவு செய்யப்பட்டது எங்களுக்கு தெரியாது.

11. பிசா ஆ 3 ல் பக்கம் இரண்டில் அந்த ட்ரெஸ்ட்டின் பெயராக அருள்மிகு ஸ்ரீ எச்சியம்மன் டெம்புல் ட்ரெஸ்ட் என உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிசா ஆ 3ல் அந்த ட்ரெஸ்ட் டீட் பதிவு செய்வதற்கு முன்பு 17.06.2012ல் ஒரு தீர்மாணம் இயற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்மானத்தின் நகலை நான் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிசா ஆ 3ன் படி அருள்மிகு ஸ்ரீ எச்சியம்மன் டெம்புல் ட்ரெஸ்ட் அமைந்துள்ள இடம் எண் 107, பண்டிக்காவனூர் கிராமம், பொன்னேரி தாலுக், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 600 067 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எந்த இடத்திலும் பெரியபாளைம் சாலை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எண் 107 பண்டிக்காவனூர் கிராமம் என்று உள்ளது.

12. வாதி ட்ரெஸ்ட்டின் கோவில் பெரியபாளையம் சாலையில் தான் அமைந்துள்ளது என்றால் எச்சியம்மன் கோவில் பெரியபாளையம் சாலையில் தான் அமைந்துள்ளது. பிசாஆ 3ன் படி உள்ள எச்சியம்மன் ஆலையம் ஊருட்குள்ளாக அமைந்துள்ளது என்றும் வாதி கூறும் கோவில் பெரியபாளையம் சாலையில் அமைந்துள்ளது என்றால் இரண்டு கோவிலும் எச்சியம்மன் ஆலையங்கள் தான். கிராம முறைப்படி திருவிழா காலங்களில் கிரமத்திற்கு உள் இருக்கும் கோவிலில் இருந்து தெய்வத்தை எடுத்து வந்து பூஜிப்பது வழக்கம் ஆகும். நான் கூறுவது தவறு என்றும் ஊரினுள் இருக்கும் கோவிலும் வாதியின் ட்ரெஸ்ட் கோவிலும் வேறு வேறு என்றால் சரியல்ல. ஏனென்றால் அ பதிவேட்டின் படி இரு கோவில் களும் எச்சியம்மன் ஆலையம் என்றே பதிவேடுகளில் உள்ளது. நான் கூறுவது தவறு என்றும் வாசா ஆ 10 ஆன அ பதிவேட்டில் கோவில் என்றே உள்ளது என்றும் எச்சியம்மன் கோவில் என்று இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் என்னிடம் அந்த ஆவணங்கள் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதை நான் தாக்கல் செய்கிறேன்.

13. நான் கூறும் ஊருக்குள் உள்ள எச்சியம்மன் ஆலையமும் பெரியபாளையம் சாலையில் உள்ள ஸ்ரீ எச்சியம்மன் பரமேஸ்வரி ஆலையமும் அமைந்துள்ள புல எண்கள் வெவ்வேறு ஆனது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள கோவில் ஊரினுள் அமைந்துள்ள எச்சியம்மன் கோவிலுக்கானது என்றால் சரிதான். (சாட்சி மேற்படி புகைப்படத்தை அடையாளம் காட்டியதன் அடிப்படையில் மேற்படி புகைப்படம் **<u>(வாசா ஆ 24</u>)** ஆக குறியீடு செய்யப்படுகிறது). வாசா ஆ 15 தான் பெரியபாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ எச்சியம்மன் பரமேஸ்வரி ஆலையம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும்அடங்கல் ஆவணம் வாசா ஆ 24ல் புகைப்படத்தில் அமைந்துள்ள ஊரினுள் உள்ள எச்சியம்மன் ஆலையத்திற்கானது என்றால் சரிதான். (மேற்படி சாட்சி அடங்கல்

ஆவணத்தை பார்த்து ஆம் என அடையாளம் காட்டியதன் அடிப்படையில் (**வாசா ஆ 25**) ஆக குறியீடு செய்யப்படுகிறது).

14. வாசா ஆ 6 மின்சார வெள்ளை அட்டை பெரியபாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ எச்சியம்மன் பரமேஸ்வரி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாதி ட்ரெஸ்ட் ஆலையத்திற்கு 1989க்கு முன்னர் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது கே.துரை என்பவர் பெயரில் தான் இன்றுவரை உள்ளது. மேற்படி வாசா ஆ 6ல் பழைய மின்சார வெள்ளை அட்டையில் துரை (கோவில்) என்று உள்ளது என்றும் புதிய மின்சார வெள்ளை அட்டையில் வாதி ட்ரெஸ்ட் கோவில் பெயர் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கினை வாதி 07.08.2012 அன்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாசா ஆ 6 ஆவணத்தின் படி 30.03.2012 லே மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ட்ரெஸ்ட் கோவில் பெயரில் சமீபத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் மின்சார வெள்ளை அட்டையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வாதி ட்ரெஸ்ட் கோவிலை பிரதிவாதிகள் நிர்வகிப்பதாக கூறும் நிலையில் எங்களது பெயரில் மேற்படி மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய முயற்சி மேற்கொண்டோமா என்றால் முயற்சித்தோம். மேற்படி பெயர் மாற்றத்திற்காக முயற்சி மேற்க்கொண்டது குறித்து ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை இனி தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

**(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 01.49 p.m.**